


**15. 09. 2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திரமோடி ஒருங்கிணைந்த படைத்தலைவர்கள் மாநாட்டை கொல்கத்தாவில் இன்று துவக்கிவைக்கிறார்.

2. செயற்கை நுண்ணறிவு, பொது நலன்களுக்கு பயன்படுத்தப்பட வேண்டுமென்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3. 2025 வக்ஃப் வாரிய சட்ட திருத்தத்தின் சில விதிகளை உச்சநீதிமன்றம் நிறுத்தி வைத்துள்ளது.

4. தமிழ்நாட்டில் பெற்றோரை இழந்த குழந்தைகள் உயர்கல்வி பெறுவது உறுதிசெய்யப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

5. **B.Ed., M.Ed.,** கல்வியியல் பிரிவுகளில் மாணாக்கர் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பதிவு வரும் 30-ம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖❖❖

<u>பிரதமர்</u>

பிரதமர் திரு. நரேந்திரமோடி ஒருங்கிணைந்த முப்படைத் தலைவர்கள் மாநாட்டை கொல்கத்தாவில் இன்று தொடங்கிவைக்கிறார்.

வரும் 17-ம் தேதிவரை 3 நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில், தளவாடங்களில் நவீன தொழில்நுட்பம், முப்படையினரிடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்துவது போன்றவை குறித்து விரிவாக விவாதிக்கப்படுகிறது.

உலகளாவிய அரசியல் சூழலில் நம்நாட்டின் ராணுவ நிலைப்பாடுகள், செயல்முறைகள் குறித்தும் இம்மாநாட்டில் ஆராயப்படுகிறது.

இதனிடையே பிரதமர் பீஹார் மாநிலம் பூர்ணியா மாவட்டத்தில் 40 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளுக்கும் இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>தேசிய பொறியாளர் தினம்</u>

தேசிய பொறியாளர் தினத்தை ஒட்டி இந்திய பொறியியலின் தந்தை என்று போற்றப்படும் விஸ்வேஸ்வரய்யருக்கு பிரதமர் மரியாதை செலுத்தியுள்ளார்.

விஸ்வேஸ்வரய்யரின் அறிவுத்திறன் நம்நாட்டின் பொறியியல் துறையில் நிலையான முத்திரையை படைத்திருப்பதாக பிரதமர் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

வளர்ச்சியடைந்த பாரதத்தை கட்டமைப்பதில் நாட்டின் பொறியாளர்கள் தொடர்ந்து முக்கிய பங்காற்றுவார்கள் என்றும் பிரதமர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>செயற்கை நுண்ணறிவு இயக்கம்</u>

செயற்கை நுண்ணறிவு துரித வளர்ச்சிக்கண்டு வருவதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்

புதுதில்லியில் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவுடன் இணைந்து வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான செயற்கை நுண்ணறிவு சார்ந்த இணையதளத்தை இன்று துவக்கி வைத்து அவர் பேசினார்.

தொழில்நுட்பம் வேகமாக வளரும் சூழலில் நாமும் அதே வேகத்தில் மாற்றங்களை முன்னெடுத்துச் செல்வது அவசியம் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

நகர்ப்புறங்களிலும், புதிதாக அமைக்கப்படும் நகரங்களிலும் காணப்படும் பல்வேறு பிரச்சனைகளை களைய செயற்கை நுண்ணறிவு சிறப்பான பங்காற்றும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

செயற்கை நுண்ணறிவை பொது நலன்களுக்கு பயன்படுத்த நாம் அறிந்துகொள்ள வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய திரு. அஸ்விணி வைஷ்ணவ், பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையில் இந்தியாவின் வளர்ச்சி வேகமாக முன்னெடுத்து செல்லப்படுவதாக கூறினார்.

உலகளாவிய தேக்க நிலையில் வலுவான தொழில்நுட்பங்களின் பின்னணியில் நம் தேசம் உள்ளடக்கிய வளர்ச்சியுடன் விரைந்து முன்னேறி செல்வதாக குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் நித்திஆயோக் தலைமை நிர்வாக அதிகாரி திரு. சுப்பிரமணியன் பங்கேற்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

வக்.ஃ.ப்

2025-ம் ஆண்டு வக்.ஃ.ப் சட்ட திருத்தங்களுக்கு தடைவிதிக்க மறுத்துள்ள உச்சநீதிமன்றம் சில நடைமுறைகளை நிறுத்தி வைத்துள்ளது.

வக்.ஃ.ப் சட்டத்திருத்தத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீது விசாரணை மேற்கொண்ட தலைமை நீதிபதி **B.R.** கவாய், நீதிபதி **A.G.** மாஸிக் ஆகியோர் கொண்ட அமர்வு, வக்.ஃ.ப் ஒன்றை உருவாக்க ஒருவர் 5 ஆண்டுகள் இஸ்லாமிய மதத்தை பின்பற்றி இருக்க வேண்டும் என்ற விதியை நிறுத்தி வைத்துள்ளது.

மாநில அரசு இப்பிரிவின் கீழ் உரிய வரையறைகளை உருவாக்கும் வரையில் இந்த நடைமுறை நிறுத்தி வைக்கப்படுவதாக உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

வக்.ஃ.ப் சொத்துகள், அரசின் சொத்தா என்பதை தீர்மானித்து உத்தரவுகளை பிறப்பிக்கும் அதிகாரம் உயரதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதையும் உச்சநீதிமன்றம் நிறுத்திவைத்துள்ளது.

வக்.ஃ.ப் வாரியத்தின் தலைமை நிர்வாக அதிகாரி கூடியவரை ஒரு இஸ்லாமியராக இருக்கவேண்டும் என்றும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மத்திய வக்.ஃ.ப் வாரியத்தில் இஸ்லாமியர் அல்லாதவர்கள் 4 பேராகவும், மாநில வக்.ஃ.ப் வாரியத்தில் 3 பேராகவும் மட்டுமே இருக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

## UPI

மின்னணு பரிவர்த்தனை **UPI** மூலம் காப்பீடு, முதலீட்டு சந்தைகள், பயணம், அரசு மின்னணு சந்தை உள்ளிட்ட குறிப்பிட்ட வணிக பிரிவுகளுக்கு தனிநபர்கள் நாள்ஒன்றுக்கு 10 லட்சம் ரூபாய் வரை பணபரிவர்த்தனை மேற்கொள்ள இன்றுமுதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பயனாளிகளின் வசதி கருதி தேசிய பணபரிவர்த்தனை கழகம் **NPCI** இதற்கான சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளதோடு பாதுகாப்பான இலகுவான பண பரிவர்த்தனைக்கும் வகை செய்துள்ளது.

இருப்பினும் தனிநபர் பணபரிவர்த்தனையில் எவ்வித மாற்றமும் இல்லாமல் நாள்ஒன்றுக்கு ஒருலட்சம் ரூபாய் என்ற நிலை தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு உரிய திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் ஆதரவற்ற குழந்தைகளுக்கு மாதந்தோறும் 2 ஆயிரம் ரூபாய் வழங்கும் அன்புக்கரங்கள் என்ற புதிய திட்டத்தை இன்று தொடங்கி வைத்து பேசியஅவர், உறவினர்கள் பராமரிப்பில் வாழும் குழந்தைகள் உயர்கல்வி பெறுவது உறுதி செய்யப்படும் என்றார்.

ஆதரவற்ற மாணாக்கரின் பிரச்சனைகளை களைந்து தேவைகளை நிறைவேற்ற அரசு முயற்சிகளை மேற்கொண்டு உள்ளதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

பேரறிஞர் அண்ணா

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் **C.N.** அண்ணாவின் 117-வது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

சென்னை அண்ணா சாலையில் அவரது திருவுருவப் படத்திற்கு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மலர்த்தூவி மரியாதை செலுத்தினார்.

அண்ணாவின் சொந்த ஊரான காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள நினைவு இல்லத்தில் அவரது திருவுருவச்சிலைக்கு மாநில கைத்தறி துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

மாநிலம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா நிகழ்ச்சிகள் அமைச்சர்களின் தலைமையில நடைபெற்று வருகிறது.

அஇஅதிமுக சார்பில் அக்கட்சியின் பொதுச்செயலர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி சென்னையில் அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர்த்தூவி மரியாதை செலுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖❖

கோவி.செழியன்

தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வியியல் கல்லூரிகளில் **B.Ed., M.Ed.,** பாடப்பிரிவுகளில் மாணாக்கர் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பதிவு வரும் 30-ம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மாநிலம் முழுவதும் காலியாக உள்ள இடங்களில் மாணாக்கர் சேர்ந்து பயில ஏதுவாக இந்த அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

வருமான வரி

2024 - 25ம் நிதியாண்டிற்கான வருமான வரி தாக்கல் செய்ய இன்று கடைசிநாளாகும்.

சமூக வலைதளங்களில் வரும் 30-ம் தேதிவரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதாக வெளியான தகவல்கள் தவறானவை எனவும் பொதுமக்கள் இதை நம்பவேண்டாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

## வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக திருப்பத்தூர், தர்மபுரி, சேலம், திருவாண்ணாமலை, செங்கல்பட்டு விழுப்புரம் மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், சேலம், வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் நாளை கனமழை பெய்யும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

தென்தமிழக கடலோரம், மன்னார் வளைகுடா குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால், வரும் 19-ம் தேதிவரை இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்லவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖

## டென்னிஸ்

பிரான்சில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் தகுதிச்சுற்று இறுதிப் போட்டியில் இந்தியாவின் ஆரியன்ஷா - அமெரிக்காவின் **Trey Hilderbrand** இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖